Vol. 8 | Special Issue 1 | April 2021

SHANLAX #SINCE1990

# Shanlax International Journal of Arts, Science and Humanities

(A Peer-Reviewed - Scholarly Indexed Quarterly Journal)

## பன்னாட்டுக் கருத்தரங்கம்

# பன்முக நோக்கில் வள்ளலாரின் படைப்புகள்



## தொகுதி

## 1

தமிழ்த்துறை

ஸ்ரீ சேவுகன் அண்ணாமலை கல்லூரி

தேவகோட்டை

ISSN INTERNATIONAL STANDARD SERIAL NUMBER INTERNATIONAL CENTRE

PKP PUBLIC KNOWLEDGE PROJECT

OJS OPEN JOURNAL SYSTEMS

SHANLAX JOURNALS

editor@shanlaxjournals.com | www.shanlaxjournals.com

# SHANLAX INTERNATIONAL JOURNAL OF ARTS, SCIENCE AND HUMANITIES

**Vol. 8** **Special Issue 1** **April, 2021**

**P-ISSN: 2321-788X** **Impact Factor: 3.025**


**Sree Sevugan Annamalai College**
*Devakottai*

**Shanlax International Journal of Arts, Science and Humanities**
*Madurai*

இணைந்து நடத்தும்

பன்னாட்டுக் கருத்தரங்கம்

## "பன்முக நோக்கில் வள்ளலாரின் படைப்புகள்"

**தொகுதி I**

| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 16. | வாழ்விக்க வந்த வள்ளலாரும் வண்டமிழ்க் கவிஞர் பாரதியாரும்<br>முனைவர் இரா. கண்ணதாசன் | 67 |
| 17. | வள்ளலாரின் ஆன்மிகப் பணிகள் - ஒரு பார்வை<br>இரா. கண்ணன் | 73 |
| 18. | வள்ளலாரின் பேரானந்தப் பெருநிலை<br>முனைவர் த. கார்த்திகேயன் | 76 |
| 19. | வாழ்விக்க வந்த வள்ளலார்<br>சுப. காளிமுத்து | 80 |
| 20. | வள்ளலார் வழியில் வடலூரும் கோவிலூரும்<br>முனைவர் பெ. குபேந்திரன் | 83 |
| 21. | வள்ளலாரின் வாழ்வியல் சிந்தனைகள்<br>முனைவர் சி. குறிஞ்சி | 87 |
| 22. | வள்ளலாரின் சமரசசுத்தசன்மார்க்கம்<br>முனைவர் கோ.சி. கோலப்பதாஸ் | 90 |
| 23. | வள்ளலார் உணர்த்திய மருத்துவ குறிப்புகள்<br>வீ. கௌசல்யா | 95 |
| 24. | வள்ளலார் கூறும் உணவு ஒழுக்கம்<br>முனைவர் அ. சங்கர்தாஸ் | 100 |
| 25. | வள்ளலாரின் சமரச சன்மார்க்கமும் அறங்களும்<br>ந. சங்கீதா மற்றும் முனைவர் மா. ரெத்தினேஸ்வரி | 103 |
| 26. | இராமலிங்க அடிகளார் வலியுறுத்தும் மனித நேயம்<br>க. சண்முகசுந்தரம் | 107 |
| 27. | இராமலிங்கத்தின் நீட்சி இராமசாமி: பின் காலனித்துவ வாசிப்பு<br>எஸ். சத்தியன் டேனியல் பெரியசாமி | 111 |
| 28. | வள்ளுவர் வழியில் வள்ளலார்<br>முனைவர் இரா. சந்தானகிருஷ்ணன் | 117 |
| 29. | குறள் நெறி வழி வள்ளலாரின் ஜீவகாருண்யம்<br>ரெ. சந்திரமோகன் | 123 |
| 30. | வள்ளலாரும் உயிரினங்களும்<br>செ.சபிதா பேகம் மற்றும் முனைவர் மா. ரெத்தினேஸ்வரி | 127 |

| வ.எண் | தலைப்பு | பக்க எண் |
|---|---|---|
| 31. | வள்ளலாரின் வாழ்வும் வாக்கும்<br>முனைவர் யா. சாம்ராஜ் | 131 |
| 32. | திருமூலர் இராமலிங்கர் அன்பு நெறிச் சிந்தனைகள்<br>முனைவர் க. சிவமணி | 134 |
| 33. | வள்ளலாரின் பாடல்களில் இறைநட்பு<br>ஆ. சுதாகர் | 137 |
| 34. | சமூகச் சீர்திருத்தத்தில் வள்ளலார் வழி கவிஞர் மீரா<br>ஆ. சுதாகர் | 140 |
| 35. | வள்ளலாரின் நிலையாமைச் சிந்தனைகள்<br>முனைவர் ரா. சுபஜா | 143 |
| 36. | வள்ளலாரின் சாதி சமய மறுப்பும், சன்மார்க்க நெறியும்<br>முனைவர் சொ. சுரேஷ் | 147 |

# வள்ளலாரின் வாழ்வும் வாக்கும்

*முனைவர் யா. சாம்ராஜ்*
உதவிப் பேராசிரியர்(தமிழ்த்துறை)
ஆறுமுகம்பிள்ளை சீதை அம்மாள் கல்லூரி
திருப்புத்தூர், சிவகங்கை மாவட்டம்

மலர்: 8
சிறப்பிதழ்: 1
மாதம்: ஏப்ரல்
வருடம்: 2021
P-ISSN: 2321-788X

பத்தொன்பதாம் நூற்றாண்டில் ஆன்மீக நிலையிலும் கவிதையுலகிலும் மாபெரும் மாற்றத்தை ஏற்படுத்திய மகாசக்தியானவர் அருட்பிரகாச வள்ளலார் என்றும் இராமலிங்க சுவாமிகள் என்றும் ஜோதி ராமலிங்கர் என்றும் பலரால் அறியப்பெற்ற சிதம்பரம் இராமலிங்கம் பிள்ளை. மானுடம் சிறக்க அரும்பாடுபட்ட ஞான வெளிச்சம் அவர். 'வாடிய பயிரைக் கண்டபோதெல்லாம் வாடினேன்' என்ற மனிதநேய முகவரியால் பேரன்பு கொண்டு வாடியவர். 'கண்மூடிப் பழக்கங்கள் மண்மூடிப் போகவும்', பசி என்று வந்தவர்கள் புசி என்று சொல்லி சத்திய தர்ம சாலையை நிறுவியவர். உயிரிரக்கமே தனது உயிர்க்கொள்கையாகக் கொண்டு நாடெங்கும் நல்லவிதையைத் தூவி வேர்விட்டு வளரச் செய்த வித்தகர். மனத்தூய்மையே மறுமலர்ச்சிக்கு வித்திடும் என்று பறைசாற்றிய அருட்பெருஞ்சோதியின் வாழ்வும் வாக்கும் குறித்து இக்கட்டுரை அமைகிறது.

## வாழ்வும் வளமும்

சிதம்பரத்திற்கு வடக்கில் உள்ள மருதூரில் திரு.இராமையா பிள்ளைக்கும், திருமதி.சின்னம்மையாருக்கும் இறைமைந்தனாய் சுபானு வருடம் புரட்டாசித் திங்கள் 21-ம் நாள் (05.10.1823) இராமலிங்கப் பெருமான் அவதரித்தார். பிறந்த ஐந்தாம் மாதம் இத்திருக்குழந்தையை கையில் ஏந்தி தில்லை நடராசப் பெருமான் சந்நிதியின் முன் பெற்றோர் தொழுதனர். அவ்விடம் அப்பைய தீட்சிதர் என்னும் அந்தணர் கற்பூரம் காட்டிக் கொண்டிருந்தார். இந்நிகழ்வைக் காண்போர் வியக்க, நடராசப் பெருமானைக் கூர்ந்து கவனத்தோடு கலகலவென்று சிரிக்கத் தொடங்கியது. இதைக் கண்ணுற்று, "இக்குழந்தை அம்பலவாணரின் அருட்குழந்தையே" எனத் தீட்சதர் வாழ்த்தி அனுப்பினார். இதன் தொடர்ச்சியே ஐந்தாம் மாதத்தில் தில்லையம்பதி திருநடனப் பெருமான் ஐந்தெழுத்தின் (நமசிவாய) மந்திரத்தைச் சொல்லத் தொடங்கியது.

அம்பலவாணரின் அருள்பெற்ற அடுத்த மாதத்திலே (ஆறாம் திங்கள்) தந்தையார் இறந்துவிட, தனது தமையனார் சபாபதி பிள்ளை அவர்களின் அரவணைப்பில் தனது தாயார் பிறந்த இடமாகிய பொன்னேரிக்கு அடுத்த சின்ன காவணம் சென்றடைந்தார். அங்கு சிலகாலம் தங்கிய பிறகு, தனது தமையனார் சென்னைக்கு வந்து உபாத்தியாயராய் புராணச் சொற்பொழிவு நிகழ்த்தி பொருளீட்டி குடும்பத்தை நடத்தினார்.

ஐந்து வயது நிரம்பியதால் தம்பிக்கு ஒரு செந்தமிழ்ப் புலவரை அழைத்து கல்வி கற்க ஏற்பாடாயிற்று. திருஞான சம்பந்தரைப் போலஅறியாப்பருவத்திலே ஆண்டவனால் ஆட்கொள்ளப்பெற்ற குழந்தையாதலின் கல்வியில்நாட்டமில்லாதிருந்தது. இச்செய்தியறிந்து தமையனார் தனது மனைவியிடம் கல்வி கற்காமல் வீணே காலங்கழிப்பதால் உணவிட வேண்டாம் என கட்டளை பிறப்பித்தார். அன்று முதல் தம் வீட்டின் மேல் மாடியில் தனியறையில் முருகப்பெருமானின் திருவுருவக் காட்சியில் நிலைத்து நிலைக்கண்ணாடியின் முன் திருவிளக்கு ஒன்றை ஏந்தி அறிவை ஒருமுகப்படுத்தி, ஆண்டவனின் அருளைச் சொந்தமாக்கிக் கொண்டார். அந்த வேளையில் முருகப்பெருமானின் திருமுகம் கண்ணாடியில் தெரிய கண்கள் குளிரக் கண்டார்.

**ஆன்மீக ஈடுபாடு**

இளமையிலேயே முருகப்பெருமானைக் கடவுளாகவும், திருஞானசம்பந்தரைக் குருவாகவும், மாணிக்கவாசகரின் திருவாசகத்தை வழிபடும் நூலாகவும், அதில் காணலாகும் 'அமுதால் உன்னைப் பெறலாமே' என்ற வாக்கை, வேதவாக்காக ஏற்றுக் கொண்டார்.

**"வான்கலந்த மாணிக்க வாசக நின்வாசகத்தை**
**நான் கலந்து பாடுங்கால் நற்கருப்பஞ் சாற்றினிலே**
**தேன் கலந்து பால்கலந்து செழுங்கனித் தீஞ்சுவை**
**கலந்தென் ஊன் கலந்து உயிர் கலந்து உவட்டாமல் இனிப்பதுவே"**

என்று மாணிக்கவாசகரைப் பற்றிக் கூறும் போது, நீத்தல் விண்ணப்பத்தில் மாணிக்கவாசகர் பாடியுள்ள, 'கலந்து' என்னும் சொல் இருப்பதை உணர்ந்து, 'கலத்தல்' என்பதன் பொருளை உற்று நோக்க, 'கலத்தல்' என்பது உள்ளம் உருகி மற்றவருடைய இன்ப துன்பத்தில் மனதை ஒன்றுப்படுத்திச் சேர்ப்பது, என்பதை உணர்ந்து, அது முதலே மனிதர்கள் மகத்துவமிக்கவர்கள், மேன்மையானவர்கள் என்று மனிதர்களைப் படிக்கத் தொடங்கினார். பண்பட்டவரானார், இன்று பார்போற்ற பவனி வருகிறார்.

வியப்புக்குரியவை

1. தனது ஐந்து வயதில் பள்ளிக்குச் சென்றும் படிப்பில் கவனமில்லாமல் இறைவனே கதியென தன்னை அவனிடம் ஒப்புவித்தார்.
2. ஒன்பது வயதில் தனது ஆசிரியரான காஞ்சிபுரம் மகாவித்துவான் சபாபதி முதலியார்,

**ஓதாமல் ஒருநாளும் இருக்க வேண்டாம்**
**ஒருவரையும் பொல்லாங்கு சொல்ல வேண்டாம்**
**மாதாவை ஒருநாளும் மறக்க வேண்டாம்**

என உலக நீதியைச் சொல்லச் சொல்லிய போது,

**'ஏன் வேண்டாம் வேண்டாம்' எனச் சொல்லச் சொல்கிறீர்கள். ஏதாவது 'வேண்டும், வேண்டும்' எனக் கேளுங்கள் என்று வேண்டலாமே என்று**

பதில் கூறினார்.

அதற்கு ஆசிரியரோ, நீ வேண்டுமானால் 'வேண்டும்' எனப்பாடுஎனக்கட்டளையிட,





"ஒருமையுடன் நினதுதிரு மலரடி நினைக்கின்ற
உத்தமர்தம் உறவு வேண்டும்
உள்ளொன்று வைத்துப் புறமொன்று பேசுவார்
உறவுகல வாமை வேண்டும்
பெருமைபெறு நினதுபுகழ் பேச வேண்டும் பொய்மை
பேசாதிருக்க வேண்டும்
பெருநெறி பிடித்தொழுக வேண்டும் மதமானபேய்
பிடியா திருக்க வேண்டும்
மருவுபெண் ணாசையை மறக்க வேண்டும் உனை
மறவா திருக்க வேண்டும்
மதிவேண்டும்நின்கருணைநிதிவேண்டும்நோயற்ற
வாழ்வில்நான் வாழ வேண்டும்"

என்றார்.

1. இளமையில் தனது தமையனார் ஒப்புக்கொண்ட சொற்பொழிவுக்கு செல்லமுடியாமல் நோய்வாய்ப்பட்டுப் போக, மாலை 6 மணி தொடங்கி இரவு 12 மணிவரை சொற்பொழிவு நிகழ்த்தி, இந்த இளைஞன் சாதாரண மானிடப்பிறவி அல்ல. இறைவனின் திருவுருவம் தாங்கியவர் போல இருக்கிறார் என்று புகழ்ந்தனர்.
2. திருவெற்றியூரில் நடந்து சென்றபோது 'இதோ ஒரு மனிதன் போகிறான்' என்று ஒரு ஞானி மகிழ்ந்து பேசினார்.
3. தண்ணீரில் விளக்கு எரிந்தது.
4. ஒரே இரவில் 1596 வரிகளையுடைய அருட்பெருஞ்சோதி அகவலைப் பாடி முடித்தார்.
5. விக்கிரக வழிப்பாட்டை வேரறுத்தார்.

**சமரச சன்மார்க்க நெறியும் பக்தி சுவையும்**

சாதியினால் மதத்தினால், மொழியினால் நிறப்பாகுபாட்டினால் தங்களைத் தாங்களே அழித்துக் கொண்டு வாழும் உலகத்தாரை, மனிதர்களாக்குவதே சமரச சன்மார்க்க நெறியாகும்.

"வஞ்சகர் அஞ்சினர் வாய்மூடிச் சென்றனர்
வந்து திரும்பவும் வாயிலில் நின்றனர்
தஞ்சம் எமக்கருள் சாமி நீ என்றனர்"

இதோடு மட்டுமல்லாமல் இறைவனைப் பாடிக் கொண்டே இருக்க வேண்டும். அவனை நினைத்துக் கொண்டே இருக்க வேண்டும். தனக்கு எல்லாமே நீதான் என்ற நிலைப்பாட்டை கொள்ள வேண்டும் என்கிறார்.

"வள்ளால் உன்னைப் பாடப் பாட
வாய்ம ணக்குதே!
வஞ்ச வினைகள் எனைவிட் டோடித்
தலைவ ணங்குதே!
எள்ளா துனது புகழைக் கேட்கச்
செவிந யக்குதே!
எந்தாய் தயவை எண்ணுந் தோறும்
உளம்வி யக்குதே!"

என்று இறைவனை நாடுகிறபோது நடைபெறும் உடலியக்கம் குறித்து இப்பாடல் வழி விளக்குகின்றார்.

**முடிவுரை**

1823 முதல் 1874 வரை 51 ஆண்டுகள். கந்தகோட்டத்தில் 1 முதல் 12 வயது வரை, திருவொற்றியூரில் 12 முதல் 35 வயது வரை, சிதம்பரத்தில் 35 முதல் 44 வயது வரை, வடலூரில் 44 முதல் 47 வயது வரை, சித்தி வளாகத்தில் 47 முதல் 51 வயது வரை, உலகிற்கு எடுத்துக்காட்டாய் துறவியாக, ஞானியாக, புலவராக, கவிஞராக, சொற்பொழிவாளராக, எழுத்தாளராக, நூலாசிரியராக, உரையாசிரியராக, ஞானாசிரியராக, போதகாசிரியராக, மருத்துவராக, சித்தராக காட்சிக்கு எளியராக, உருவத்தில் சாதாரண உயரமுள்ளவராக, மெலிந்த உடலுடையவராக, எலும்புகள் தெரிந்தவராக, சாதாரண சிவந்த மேனியராக, பரந்த பொறி பறக்கும் கண்களையுடையவராக, இவ்வுலகை இன்றும் ஆண்டு நடத்துகின்றார். நம்மையும் இறையுணர்வில், மனிதரை மதிக்கும் பண்புகளில் சிறந்துவிளங்கச் செய்கின்றார் என்பது இக்கட்டுரை வழிப் புலனாகிறது.